தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க. எண் 27925 / டி1 / 2012, நாள் 09.12.2012

பொருள் : தொடக்கக் கல்வி – 2010–2011 ஆண்டுக்கான இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடம் – தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட பணி நாடுநர்களுக்கு பணிநியமன ஒதுக்கீட்டு ஆணை வழங்குதல் – 11.12.2012 அன்று இணையதளம் மூலம் கலந்தாய்வு நடைபெறுதல் – முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் – சார்ந்து.

பார்வை :

1. சென்னை – 6, ஆசிரியர் தேர்வு வாரியம், தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண் 6866 / அ1 / 2011, நாள் 28.11.2012
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண் 27925 / டி1 / 2012, நாள் 08.12.2012

... ... ...

பார்வையில் காணும் சென்னை – 6, ஆசிரியர் தேர்வு வாரியம், தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி, 2010–2011 கல்வி ஆண்டுக்கான இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக தெரிவுப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பெறப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கான பட்டியலில் உள்ள பணிநாடுநர்களுக்கு பணி ஒதுக்கீட்டு ஆணை மற்றும் பணிநியமன ஆணை 11.12.2012 அன்று சார்ந்த பணிநாடுநர்களின் வேலை வாய்ப்பக பதிவு மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இணையதளம் மூலம் வழங்கப்படவுள்ளது.

எனவே, www.tndse.in இணையதளத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கான பணி நாடுநர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன. **ஆசிரியர் தேர்வு வாரியத்தில் அளிக்கப்பட்ட பணிநாடுநர்களின் வீட்டு முகவரியின் அடிப்படையில்,** முதன்மைக் கல்வி அலுவலகங்களில் 11.12.2012 அன்று காலை 07.30 மணிக்கு www.tndse.com என்ற இணையதளம் மூலம் தொடர்ந்து நியமன ஆணை வழங்கிட அனைத்து ஆயத்தப் பணிகளையும் முதன்மைக் கல்வி அலுவலருடன் சேர்ந்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், கலந்தாய்வில் கலந்துக்கொள்ளும் பணிநாடுநர்களுக்கு குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி ஆகியவற்றை முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஏற்படுத்தித்தர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே, இணையதளம் மூலம் கலந்தாய்வு நடத்தி அனுபவம் பெற்றுள்ள கணினி ஆசிரியர்களைத் தற்போதும் இப்பணியில் ஈடுபடுத்தி, கலந்தாய்வை சிறப்புற நடத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***www.TeacherTN.com***